# காரைக்கால் நகராட்சி

## காரைக்கால் நகராட்சி ஆணையரின் செய்தி குறிப்பு

1. காரைக்கால் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வணிகம் செய்வோர், தங்கள் கடைகளுக்கு தொழில் உரிமம் பெற்று வணிகம் செய்ய வேண்டும். ஆனால் தற்பொழுது பெரும்பாலான வணிக நிறுவனங்கள் தொழில் உரிமம் பெறாமலும், அப்படிப்பெற்ற உரிமங்கள் புதுப்பிக்காமலும் இருந்து வருவது நகராட்சி அதிகாரிகள் மேற்கொண்ட கள ஆய்வின் போது கண்டறியப்பட்டுள்ளது.
2. எனவே இதனை ஒழுங்கு படுத்தும் நோக்கத்துடனும், வியாபாரிகளின் நலனை கருத்தில் கொண்டும் காரைக்கால் நகராட்சியும் காரைக்கால் சேம்பர் ஆப் காமர்ஸும் இணைந்து ஒரு முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
3. இந்த முகாமானது எதிர்வரும் 27.02.2018 முதல் 28.02.2018 வரை காரைக்கால் கோவில் பத்து தெற்கு வீதியில் அமைந்துள்ள காரைக்கால் சேம்பர் ஆப் காம்ர்ஸ் கட்டிடத்தில் காலை மணி 10.00 முதல் மாலை 5-00 மணி வரை தொடர்ச்சியாக நடைபெறும்.
4. எனவே இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டு வணிக பெருமக்கள் புதிதாக தொழில் உரிமம் பெறவும், ஏற்கனவே பெற்றுள்ள தொழில் உரிமத்தினை உடனடியாக புதுப்பித்துக்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறீர்கள்.
5. தவறும் பட்சத்தில் எந்த வித முன் அறிவிப்பு மின்றி தங்களது வணிக நிறுவனங்கள் "சீல்" செய்யப்படுவதுடன் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அபராதம் விதிக்கப்படும் என்பதனை தாங்கள் அறியவும்..

KARAIKAL MUNICIPALITY REVENUE SECTION KARAIKAL

23/2/18

ஆணையர்,
காரைக்கால் நகராட்சி